1981 ஏப்ரல் 22]

மங்களபுரம் பஞ்சாயத்துக்கருகிலுள்ள மலையில் கிடைக்கும் வெள்ளைக் கற்கள்.

*வினா எண் 849—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட நாமகிரிப் பேட்டை ஒன்றியத்திலுள்ள மங்களபுரம் பஞ்சாயத்து அருகில் உள்ள மலையில் வெள்ளைக்கல் நிறைய உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இங்கு அரசு தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இராசபுரம் வட்டம் நாரைக் கிணறு வரையறுக்கப் பட்ட வனப்பகுதியில் "நொனாக்கரடு" பகுதியிலும், மங்கள புரம் வருவாய் கிராமத்தில் "மொட்டைக்கரடு" பகுதியிலும் சில திட்டுக்களாக (P tches) மாக்னசைட் (M g es te) (வெள்ளைக்கல்) காணப்படுகிறது.

(ஆ) இங்கு மாக்னஸைட் அமைப்புகள் மிகச் சிறிய அளவில் உள்ளதால் அவைகளை ஆதாரமாகக் கொண்டு தொழிற்சாலை அமைக்க இயலாது.

பெரியகுளம் பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம்.

*வினா எண். 850—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவப்படும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS